கூடுதல் மாவட்ட நீதிமன்றம், திருவண்ணாமலை.

மோட்டார் வாகன விபத்துக்கள் கோருரிமை தீர்ப்பாயம்

முன்னிலை திரு.பெ. பார்த்தசாரதி, பி.எல்.

மோட்டார் வாகன விபத்துக்கள் இழப்பீடு கோருரிமை தீர்ப்பாய நீதிபதி

(கூடுதல் மாவட்ட நீதிபதி), (முழு கூடுதல் பொறுப்பு), திருவண்ணாமலை.

திருவண்ணாம லை.

**2024 ம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 27 ம் நாள் செவ்வாய் கிழமை**

**M.C.O.P. No.1435/2022**
**CNR NO.TNTM01-006296-2022**

1. சுபா,

2. மைனர் ரஞ்சினி,

3. மைனர் ஹரிஹரன்

(மைனர்களுக்கு கார்டியன் தாயார் அடுத்த சிநேகிதர்

1 ம் மனுதாரர் சுபா)

4. நவநீதம் ..... மனுதாரர்கள்

-- எதிர் –

அன்பரசு .... எதிர்மனுதாரர்

இம்மனு 19.08.2024 ம் தேதியன்று இறுதி விசாரணைக்கு வந்தபோது மனுதாரர்களுக்காக வழக்கறிஞர் திரு. ஜே. வெங்கடேசன் அவர்கள் ஆஜராகியும் , எதிர்மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு. என். நிலவரசு அவர்கள் ஆஜராகியும் , எதிர்மனுதாரரை நீதிமன்றத்தில் அழைத்தும் ஆஜராகாததால் தோன்றா தரப்பினராக கருதப்பட்டும் மனுதாரர் தரப்பில் மனுவில் முன்னிடப்பட்ட சாட்சிய சான்றாவணங்களை பரிசீலனை செய்தும் இதுநாள் வரை என் பரிசீலனையிலிருந்து வந்து இன்று இந்நீதிமன்றம் வழங்கும்.

**உத்தரவு**

மோட்டார் வாகன சட்டப்பிரிவு 166 ன் கீழ் 20.08.2022 ம் தேதியன்று இரவு 7.30 மணியளவில் திருவண்ணாமலை டு திருக்கோவிலூர் ரோட்டில் உள்ள தெற்கு ஓட்டல் எதிரே சாலை விபத்தில் இறந்துபோன முருகன் என்பவரின் இறப்பிற்காக அவரது வாரிசுகளான மனுதாரர்கள் ரூ.30.00.000-- இழப்பீடு கோரி மனு தாக்கல் செய்துள்ளனர்.

2) மனுவின் சுருக்கம்

, கடந்த 20.08.2022 ம் தேதி இரவு 7.30 மணியளவில் இறந்துபோன முருகன் என்பவர் வடக்கிலிருந்து தெற்குநோக்கி திருவண்ணாமலை டு திருக்கோவிலூர் ரோட்டில் உள்ள தெற்கு ஓட்டல் எதிரே வேட்டலம் சாலையில் உள்ள அவரது காயிலான் கடையை மூடிவிட்டு வேலையை முடித்துவிட்டு அவரது வீட்டிற்கு செல்வதற்காக சாலையின் இடதுபுற ஓரமாக அவருக்கு சொந்தமான டி.என்.02 எக்ஸ் 1109 ஸ்கூட்டி பெப்ட் என்ற இருசக்கர வாகனத்தில் சென்று

கொண்டிருந்தபோது, எதிர்மனுதாரருக்கு சொந்தமான டி.என்.32 எப் 9175 என்ற பதிவெண் கொண்ட ஹீரோ ஹோண்டா ஸ்பிலண்டர் பிளஸ் இருசக்கர வாகனத்தை எதிர்மனுதாரர் அதிவேகமாகவும், ஆரனடிக்காமலும், அஜாக்கிரதையாகவும் கவனக்குறைவாகவும் வலதுபக்க இன்டிகேட்டர் போடாமலும் திடீரென வலதுபுறம் திருப்பி, மேற்படி முருகன் என்பவர் மீது மோதி விபத்தை ஏற்படுத்தினார். மேற்படி விபத்தில் முருகன் என்பவருக்கு வலதுகால் முட்டியில் பலத்த ரத்தக் காயமும், தலை ஆகிய இடங்களில் பலத்த இரத்தக் காயமும் ஏற்பட்டுள்ளது. இறந்த நபர் 1ம் மனுதாரரின் கணவரை அங்கிருந்தவர்கள் உதவியுடன் அருணை மருத்துவக்கல்லூரி மற்றும் மருத்துவமனைக்கு அழைத்துச் சென்று அங்கு மருத்துவர் முதலுதவி சிகிச்சை செய்து மேல் சிகிச்சைக்காக திருவண்ணாமலை அரசு தலைமை மருத்துவக் கல்லுரி மருத்துவமனைக்கு கொண்டு போய் சேர்த்து பின்னர் மேல்சிகிச்சைக்காக சென்னை ராஜீவ் காந்தி அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவ மனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சைப் பலனின்றி 22.08.2022 ம் தேதி இறந்து விட்டார். இந்த விபத்து குறித்து எதிர்மனுதாரர் மீது திருவண்ணாமலை கிழக்கு காவல் நிலையத்தில் குற்ற எண். 388/2022 ல் பிரிவுகள் Sections 279, 337 of IPC @ Sections 279, 337 and 304(A) of IPC இதசவின் கீழ் வழக்கு பதிவு செய்து புலன் விசாரணையில் இருந்து வருகிறது . இறந்துபோன முருகன் என்பவர் நல்ல திடகாத்திரமான உடலமைப்பும் ஆரோக்கியமும் உடைய 40 வயது நிரம்பியவர் ஆவார். அவர் காயிலான் கடை வைத்து வியாபாரம் செய்து மாதம் ஒன்றிற்கு ரூ .25,000/- சம்பாதித்து அவரது குடும்பத்திற்கு கொடுத்து வந்தார் . விபத்தில் இறந்துபோன முருகன் என்பவருக்கு 1, 4 மனுதாரர்கள் முறையே மனைவி மற்றும் தாய் என்றும் , 2, 3 மனுதாரர்கள் இறந்துபோனவரின் மைனர் குழந்தைகள் ஆவார்கள் . குடும்பத்தில் சம்பாதித்து வந்த ஒரே நபர் இறந்த முருகன் மட்டுமே ஆவார். மேற்படி விபத்துக்கு முழு காரணம் எதிர்மனுதாரர் வாகனத்தை அதிவேகமாகவும், அஜாக்கிரதையாகவும், ஆரனடிக்காமலும் கவனக்குறைவாகவும் ஓட்டி வந்ததே காரணமாகும். மேற்படி டி .என்.32 எப் 9175 என்ற பதிவெண் கொண்ட ஹீரோ ஹோண்டா ஸ்பிலண்டர் பிளஸ் இருசக்கர வாகனத்தை ஓட்டிய நபர் எதிர்மனுதாரர் ஆவார் . எனவே மனுதாரர்கள் அனைத்து தலைப்புகளின் கீழும் ரூ .30,00,000/- நஷ்ட ஈடு கோருகிறார்கள். அதை எதிர்மனுதாரர் வழங்க கடமைப்பட்டவர்.

**3)** எதிர்மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு . என்.நிலவரசு வக்காலத்து தாக்கல் செய்து , எதிருரை தாக்கல் செய்ய போதிய காலஅவகாசம் வழங்கப்பட்டும் எதிருரை தாக்கல் செய்யவில்லை. எதிர்மனுதாரர் அழைத்தும் ஆஜரின்மையால் தோன்றா தரப்பினராக கருதப்பட்டு உள்ளார்.

4) மனுதாரர்கள் தரப்பில் ம .சா.1 ஆக சுபா என்பவரும். ம.சா.2 ஆக ராஜாமணி என்பவரும் விசாரிக்கப்பட்டு ம.சா.ஆ.1 முதல் மசா.ஆ.8 வரையிலான ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது. எதிர்மனுதாரர் தரப்பில் சாட்சிகள், சான்றாவணங்கள் எதுவும் முன்னிடப்படவில்லை. மனுதாரர்கள் தரப்பு வாதம் கேட்கப்பட்டது. ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டது.

5) **தீர்வுக்குரிய பிரச்சனைகள்**

1. இந்த மனு விபத்து டி.என்.32 எப் 9175 என்ற பதிவெண் கொண்ட ஹீரோ ஹோண்டா ஸ்பிலண்டர் பிளஸ் வாகனத்தை ஓட்டி வந்த எதிர்மனுதாரரின் அதிவேகம், அஜாக்கிரதை மற்றும் கவனக்குறைவால் ஏற்பட்டதா ?
2. மனுதாரர்களுக்கு இழப்பீடு கிடைக்கத்தக்கதா ? அவ்வாறெனில் மனுதாரர்களுக்கு கிடைக்கக்கூடிய இழப்பீட்டின் அளவு என்ன ?
3. எதிர்மனுதாரர் மனுதாரர்களுக்கு இழப்பீடு கொடுக்க வேண்டுமா ?

**6.பிரச்சனை 1**

(அ) மனுதாரர்கள் சார்பில் 1ம் மனுதாரரின் மனுவில் , கடந்த 20.8.2022 ம் தேதி இரவு 7.30 மணிக்கு திருவண்ணாமலையிலிருந்து திருக்கோவிலூர் செல்லும் சாலையில் வடக்கிலிருந்து தெற்கு நோக்கி வீட்டிற்கு செல்ல சாலையின் இடதுபுறமாக டி.என். 02 எக்ஸ் 1109 என்ற பதிவெண் கொண்ட ஸ்கூட்டி பெப்ட் என்ற இருசக்கர வாகனத்தில் சென்றுகொண்டிருந்த இறந்துபோன முருகன் என்பவர் மீது டி .என்.32 எப் 9175 என்ற ஹீரோ ஹோண்டா ஸ்பிலண்டர் பிளஸ் இருசக்கர வாகனத்தை அதன் ஓட்டுநர் அதிவேகமாகவும் , அஜாக்கிரதையாகவும், கவனக்குறைவாகவும், சாலை விதிகளை கடைபிடிக்காமலும், வலதுபக்க இன்டிகேட்டர் போடாமலும் திடீரென வலதுபுறம் திருப்பி 1ம் மனுதாரரின் கணவர் ஓட்டி வந்த வாகனத்தின் மீது மோதி விபத்தை ஏற்படுத்தி விட்டார் . இந்த விபத்தில் 1ம் மனுதாரரின் கணவருக்கு வலதுகால் முட்டியில் பலத்த இரத்தக் காயமும் , தலையிலும் பலத்த இரத்தக் காயமும் ஏற்பட்டு தென்மாத்தூரில் உள்ள அருணை மருத்துவக்கல்லூரி மருத்துவமனைக்கு அழைத்து சென்று முதலுதவி சிகிச்சை செய்து மேல்சிகிச்சைக்காக திருவண்ணாமலை அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் சிகிச்சைக்காக கொண்டு போய் சேர்த்தனர். பின்னர் அங்கிருந்த மருத்துவர்களின் அறிவுறுத்தலின் பேரில் மேல்சிகிச்சைக்காக சென்னை ராஜீவ் காந்தி அரசு தலைமை மருத்துவக்கல்லூரி மருத்து வமனையில் 21.08.2022 ம் தேதி சேர்த்தும், சிகிச்சை பலனின்றி 22.8.2022 ம் தேதி இறந்துவிட்டார். பின்பு 1ம் மனுதாரரின் கணவரின் பிரேதத்தை சென்னை ராஜீவ்காந்திஅரசு பொது மருத்துவ மனையில் மருத்துவர் பிரேத பரிசோதனை செய்து 1ம் மனுதாரரின் உடலை ஒப்படைத்தனர். இந்த விபத்திற்கு திருவண்ணாமலை கிழக்கு காவல் நிலையத்தில் குற்ற எண் . 388/2022 ல் பிரிவுகள் 279 மற்றும் 377 இதச மாற்றம் பிரிவுகள் 279, 337 மற்றும் 304(எ) இதசவின் கீழ் வழக்கு பதிவு செய்து வழக்கு புலன் விசாரணையில் இருந்து வருவதாக சொல்லியுள்ளார் . இந்த மனு விபத்திற்கு பதிவு செய்யப்பட்ட முதல் தகவல் அறிக்கையின் புகைப்பட நகல் ம .சா.ஆ.1 ஆக தாக்கல் செய்துள்ளார். ம.சா.ஆ.1 ன் படி இந்த விபத்திற்கு டி .என்.32 எப் 9175 என்ற ஹீரோ ஹோண்டா ஸ்பிலண்டர் பிளஸ் இருசக்கர வாகனத்தின் ஓட்டுநர் மீது வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது . இறந்துபோன முருகன் என்பவரின் பிரேத பரிசோதனைஅறிக்கை புகைப்பட நகல் மசா .ஆ.2 ஆகவும், இறந்துபோன முருகன் என்பவரின் இறப்புச் சான்றிதழின் நகல் மசா .ஆ.3 ஆகவும், இறந்துபோன முருகன் என்பவரின் வாரிசு சான்றிதழின் நகல் மசா.ஆ.4 ஆகவும், மனுதாரர்களின் ஆதார் அட்டை நகல்கள் மசா.ஆ.5 ஆகவும், மனுதாரர்களின் வங்கி பாஸ் புத்தகம் நகல் மசாஆ .6 ஆகவும், விபத்தில்

சம்பந்தப்பட்ட டி.என். 32 எப் 9175 என்ற இருசக்கர வாகனத்தின் மோட்டார் வாகன ஆய்வறிக்கை நகல் மசாஆ .7 ஆகவும், சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை நகல் ம .சா.ஆ.8 ஆகவும், தாக்கல் செய்துள்ளார்.

(ஆ) மேற்படி ம.சா.ஆ.1, 2, 3, 7, 8 ஆவணங்களின்படி மனு விபத்து டி .என்.32 எப் 9175 என்ற இருசக்கர வாகனத்தை ஓட்டி வந்த எதிர்மனுதாரரின் அதிவேகம் அஜாக்கிரதை மற்றும் கவனக்குறைவால் ஏற்பட்டது என்று பிரச்சனை எண்.1க்கு தீர்வு காண்கிறேன்.

7. **<u>பிரச்சனை எண்.2</u>**

(மனுதாரர்களுக்கு இழப்பீடு கிடைக்கத்தக்கதா ? அவ்வாறெனில் மனுதாரர்களுக்கு கிடைக்கக்கூடிய இழப்பீட்டின் அளவு என்ன ?)

(அ) மனுதாரர்கள் சார்பில் விபத்தின் போது இறந்துபோன 1ம் மனுதாரரின் கணவருக்கு 40 வயது என்றும், அவர் காயிலான் கடையில் வேலை பார்த்து மாதம் ஒன்றிற்கு ரூ .25,000/-க்கு மேல் சம்பாதித்து குடும்பத்தை காப்பாற்றியதாக சொல்லியுள்ளார். ஆனால் மனுதாரர்கள் சார்பில் இறந்து போன முருகன் என்பவருடைய வயதை நிரூபணம் செய்ய சாட்சியமோ , சான்றாவணமோ, அவருடைய வருமானத்தை காட்ட எந்த சான்றாவணமோ எதுவும் தாக்கல் செய்யவில்லை . ம.சா.ஆ 2 பிரேத பரிசோதனை அறிக்கையில் , இறந்துபோனவரின் வயது 40 என்று உள்ளது. எனவே இறந்துபோனவரின் வயதை 40 என்று முடிவு செய்கிறேன்.

(ஆ) இறந்துபோன முருகன் என்பவருக்கு 1ம் மனுதாரர் தான் மனைவி என்றும் , 2, 3 மைனர் மனுதாரர்கள் குழந்தைகள் என்றும் , 4ம் மனுதாரர் தான் தாய் என்றும் , மனுவில் சொல்லியுள்ளார்கள். மனுதாரர்களுடைய வாரிசு சான்றிதழ் மசாஆ .4 ஆக தாக்கல் செய்யப்பட்டு உள்ளது. எனவே இறந்துபோன முருகன் என்பவர் நான்கு குடும்ப உறுப்பினர்களை வைத்து காப்பாற்றி வந்துள்ளார். எனவே இறந்துபோனவரின் வயதை கருத்திற்கொண்டும, அவர் காயிலான் கடை வேலைசெய்து வந்ததன் மூலம் குறைந்தபட்சம் மாதம் ஒன்றிற்கு ரூ.12,000/- வருமானம் ஈட்ட வாய்ப்புள்ளது என்றே முடிவு செய்கிறேன். எனவே ம.சா.1ன் கணவரான இறந்துபோன முருகனின் உத்தேச மாத வருமானம் ரூ.12,000/- என்றே இந்நீதிமன்றம் நிர்ணயிக்கிறது.

(இ) இவ்வழக்கிலும் விபத்தில் இறந்துபோன முருகனுக்கு நிரந்தர வேலை வாய்ப்புடையவர் என்ற தலைப்பின் கீழ் வரமாட்டார் என்பதால் சுயதொழில் செய்பவர் என்றே தீர்மானித்து இறந்த நபர் 40 வயதுடையவர் என்பதால் எதிர்கால வாய்ப்புகள் (Future Prospects) என்ற அடிப்படையில் 25% ஐ மாத வருமானத்தோடு கணக்கீடு செய்ய இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது. உத்தேச மாத வருமானம் ரூ.12000/- ல் எதிர்கால வாய்ப்புகள் 25 % என்பது ரூ. 3000/- ஆகும். இரண்டையும், சேர்த்தால் மொத்தம் ரூ .15000/- , இறந்துபோன நபரை சார்ந்து 4 நபர்கள் உள்ளதால் அவரது தனிப்பட்ட செலவுக்காக 4 ல் 1பங்கு கழித்துக் கொண்டு பாக்கி 4 ல் 3 பங்கு மனுதாரர்களுக்கு கொடுத்திருப்பார் என்று இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது. எனவே மொத்த வருமானம் ரூ.15000/- ல் ¼ க்கு ரூ.3750/- கழித்தது போக மீதி ரூ .11,250/- மாத வருமான இழப்பீடு என்று முடிவு செய்கிறேன் . அதன் அடிப்படையில் இறந்த நபரின் வயதுக்கான பெருக்கல் காரணி 15 ஐ பயன்படுத்தி கணக்கீடு செய்யும் போது ரூ. 11250 X 12 X 15 = 20,25,000/- என வருகிறது. Loss of Estate என்ற தலைப்பின் கீழ் ரூ.16,500/-மும், ஈமகாரியத்திற்கான செலவிற்காக ரூ.16,500/-மும், வழங்கலாம் என்று இந்நீதிமன்றம்

தீர்மானிக்கிறது. வழக்கு விபத்தில் 1ம் மனுதாரர் அவரது கணவரை இழந்துவிட்டதால் அன்பு மற்றும் பாசத்திற்காக தலா ரூ.44,000/- அவருக்கு வழங்கலாம் என்றும் , 2 மற்றும் 3 மைனர் மனுதாரர்கள் தங்களது தகப்பனாரை இழந்துவிட்டதால் அன்பு மற்றும் பாசத்திற்காக தலா ரூ.44,000/- வீதம் 88000/- மும், 4 ம் மனுதாரர் அவரது மகனை இழந்துவிட்டதால் அன்பு மற்றும் பாசத்திற்காக ரூ.44000/- அவர்களுக்கு வழங்கலாம் என்றும், ஆக 1 முதல் 4 மனுதாரர்களுக்கு அன்பு மற்றும் பாசத்திற்காக மொத்த மதிப்பு ரூ. 1,76,000/- என இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

(ஊ) மேற்சொன்ன வகையில் கீழ்க்கண்ட தலைப்புகளில் மனுதாரர்களுக்கு நஷ்ட ஈடாக கீழ்க்கண்ட தொகைகள் கிடைக்கத்தக்கது என்று இத்தீர்ப்பாயம் முடிவு செய்கிறது.

| | |
|---|---|
| பணவரை இழப்பு | ரூ. 20,25,000.00 |
| ஈம சடங்கு | ரூ. 16,500.00 |
| சொத்து இழப்பு | ரூ. 16,500.00 |
| பொருள் நட்ட ஈடு | ரூ. 2,000.00 |
| மனுதாரர்களின் தோழமை இழப்பு | ரூ. 1,76,000.00 |
| ஆக மொத்தம் | ரூ. 22,36,000.00 |

மேற்சொன்ன மொத்த இழப்பீட்டுத் தொகை ரூ . 22,36,000/- மனுதாரர்களுக்கு கிடைக்கத்தக்கது என்று இத்தீர்ப்பாயம் பிரச்சனை எண்.2 க்கு விடையளிக்கிறது.

**8. <u>பிரச்சனை எண். 3</u>**

பிரச்சனை எண்.1 க்கு இந்த மனு விபத்து 1ம் எதிர்மனுதாரரின் அதிவேகம் அஜாக்கிரதை மற்றும் கவனக்குறைவால் ஏற்பட்டது என்று தீர்மானிக்கிறது . எனவே மனுதாரர்களுக்கு எதிர்மனுதாரர் இழப்பீடு கொடுக்க கடமைப்பட்டவர் என்று பிரச்சனை எண் 3 க்கு தீர்வு காண்கிறது.

முடிவில் மனுதாரர்களின் மனு பகுதியாக விகிதாச்சா செலவுத் தொகையுடன் அனுமதிக்கப்படுகிறது.

(அ) முடிவாக மனுதாரர்களின் இம்மனு பகுதியாக அனுமதிக்கப்பட்டு மொத்த இழப்பீட்டுத் தொகையாக ரூ.22,36,000/- (ரூபாய் இருபத்திரெண்டு லட்சத்து முப்பத்து ஆராயிரம் மட்டும் ) கிடைக்கத்தக்கது என்றும் ,மேற்படி இழப்பீட்டுத்தொகையினை மனு தாக்கல் செய்த தேதியிலிருந்து ஆண்டிற்கு 7.5 சதவித பின் வட்டியும் மற்றும் செலவுத்தொகையும் சேர்த்து , செலுத்த வேண்டுமென்று உத்தரவிடப்படுகிறது . எதிர்மனுதாரர் மனுதாரர்களுக்கு உண்டான இழப்பீட்டுத் தொகையை இன்றிலிருந்து இரண்டு மாத காலத்திற்குள் இத்தீர்ப்பாயத்தின் வங்கிக் கணக்கில் அதாவது DISTRICT JUDGE MACT, TIRUVANNAMALAI, STATE BANK OF INDIA, TIRUVANNAMALAI BRANCH ல் உள்ள நடப்பு கணக்கு எண் . 00000036195932535 - IFSC Code No.SBIN0000938 - ல் வைப்பீடு செய்ய வேண்டுமென்று உத்தரவிடப்படுகிறது.

(ஆ) மேற்படி இழப்பீட்டுத் தொகையில் 1ம் மனுதாரருக்கு ரூ .8,36,000/- மும், 2, 3 மைனர் மனுதாரர்களுக்கு தலா ரூ. 6,00,000/- தொகையும், 4 ம் மனுதாரருக்கு ரூ . 2,00,000/- தொகையும் இழப்பீடாக கிடைக்கத்தக்கது என்றும் உத்தரவிடப்படுகிறது.

(இ) 1ம் மனுதாரருக்கு சேரவேண்டிய பங்குதொகையில் 50 சதவித தொகையை, விகிதாச்சாரபடி சேர வேண்டிய வட்டி மற்றும் செலவுத்தொகையுடன் சேர்த்து இத்தீர்ப்பாயத்திலிருந்து உடனடியாக பெற்றுக் கொள்ளலாம் என்றும், எஞ்சியுள்ள பாக்கி 50 சதவித பங்கு தொகையை ஏதேனும் ஒரு தேசியமயமாக்கப்பட்ட வங்கியில் 3 ஆண்டுகளுக்கு வைப்பீடு செய்தும் அதிலிருந்து வரும் வட்டித் தொகையை அவர் 6 மாதங்களுக்கு ஒரு முறை பெற்றுக் கொள்ளலாம் என்றும் உத்தரவிடப்படுகின்றது.

(ஈ) 2, 3 மைனர் மனுதாரர்களுக்காக ஒதுக்கப்பட்ட இழப்பீட்டுத் தொகைகளை அவர்களது இளவர் பருவம் நீங்கும்வரை ஏதேனும் ஒரு தேசியமயமாக்கப்பட்ட வங்கியில் நிரந்தர வைப்பீடு செய்யப்பட வேண்டுமென்றும், அதிலிருந்து வரக்கூடிய வட்டித் தொகையை 6 மாதங்களுக்கு ஒருமுறை இளவர்களின் பாதுகாவலரும் காப்பாளருமான முதல் மனுதாரர் சுபா இளவர்களின் பராமரிப்பு செலவிற்காக பெற்றுக் கொள்ள அனுமதி வழங்கியும் உத்தரவிடப்படுகிறது.

(உ) 4 ம் மனுதாரர் அவருக்குரிய இழப்பீட்டுத் தொகையை வட்டியுடன் முழுவதையும் இத்தீர்ப்பாயத்திலிருந்து உடனடியாக பெற்றுக் கொள்ளலாம் என்றும் உத்தரவிடப்படுகிறது . தரப்பினர்களுக்கு மேற்சொன்ன வகையில் கிடைக்கக்கூடிய தொகைகள் அனைத்தும் அவரவர்களின் வங்கி கணக்கில் நேரடியாக NEFT or RTGS மூலம் செலுத்தப்படவேண்டும் என்று உத்தரவிடப்படுகிறது.

(ஊ) பாக்கி நீதிமன்ற கட்டணம் ரூ . 21232.50 ஐ மனுதாரர்கள் உடனடியாக செலுத்த வேண்டுமென்றும் அவ்வாறு செலுத்திய பின்னரே தீர்ப்பாணை நகலை மனுதாரர்கள் பெற்றுக் கொள்ளலாம் என்றும் உத்தரவிடப்படுகின்றது. வழக்கறிஞர் கட்டணம் ரூ. 29,360/- என்று நிர்ணயம் செய்யப்படுகிறது.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் விரிவுப்படுத்தி தட்டச்சு செய்யப்பட்டதை என்னால் பிழைத்திருத்தம் செய்யப்பட்டு இன்று 2024 ம் ஆண்டு ஆகஸ்டு திங்கள் 27 ம் நாள் திறந்த இந்நீதிமன்றத்தில் அவையறியப் பகரப்பட்டது.

P PARTHASARATHY
Digitally signed by P PARTHASARATHY
Date: 2024.09.25 21:51:09 +0530

தீர்ப்பாய நீதிபதி/கூடுதல் மாவட்ட நீதிபதி (FAC),

திருவண்ணாமலை.

<u>மனுதாரர்கள் தரப்பு சாட்சிகள்</u>

ம.சா.1. சுபா

ம.சா.2 ராஜாமணி

<u>மனுதாரர்கள் தரப்பு சான்றாவணங்கள்</u>

ம.சா.ஆ.1 - முதல் தகவல் அறிக்கையின் புகைப்பட நகல்

ம.சா.ஆ.2 – பிரேத பரிசோதனை அறிக்கையின் புகைப்பட நகல்

ம.சா.ஆ.3 - இறந்துபோன முருகனின் இறப்பு சான்றின் நகல்

ம.சா.ஆ.4 - இறந்துபோன முருகனின் வாரிசு சான்றிதழின் நகல்

ம.சா.ஆ.5 - மனுதாரர்களின் ஆதார் அடையாள அட்டைகளின் நகல்கள்

ம.சா.ஆ.6 – மனுதாரர்களின் வங்கி பாஸ் புத்தக நகல்கள்

ம.சா.ஆ.7 – டி.என்.32 எப் 9175 என்ற இருசக்கர வாகனங்களின் மோட்டார் வாகன ஆய்வறிக்கை நகல்

ம.சா.ஆ.8 - பிரவு மாற்ற அறிக்கை நகல்

<u>எதிர்மனுதாரர்கள் தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணங்கள்</u> இல்லை.

P PARTHASARATHY
Digitally signed by P PARTHASARATHY
Date: 2024.09.25 21:51:19 +0530

தீர்ப்பாய நீதிபதி/கூடுதல் மாவட்ட நீதிபதி(FAC),

திருவண்ணாமலை.